**செய்தி வெளியீடு எண்:746** **நாள்: 04.11.2017**

<u>செய்தி வெளியீடு</u>

## வடகிழக்கு பருவமழையை எதிர்கொள்ள தமிழ்நாடு அரசால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்களால் 8.9.2017, 9.10.2017 மற்றும் 24.10.2017 ஆகிய தேதிகளில் வடகிழக்கு பருவமழை முன்னேற்பாடுகள் குறித்து அரசு உயர் அலுவலர்களுடன் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும், 2.11.2017 இது தொடர்பாக மூத்த அமைச்சர்கள், தலைமைச் செயலாளர் மற்றும் பல்வேறு துறை அரசுச் செயலாளர்களுடன் ஆலோசனை மேற்கொள்ளப்பட்டது.

மேலும், வடகிழக்கு பருவமழை தொடர்பான முன்னேற்பாடுகள் குறித்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் 9.10.2017 அன்று நடைபெற்ற தமிழ்நாடு பேரிடர் மேலாண்மை ஆணையத்தின் ஆய்வுக் கூட்டத்தில் தமிழ்நாடு அரசால் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக அறிவுரைகள் வழங்கப்பட்டன.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களால் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை ஆணையர் அலுவலகத்தில் அமைந்துள்ள மாநில அவசர கட்டுப்பாட்டு மையத்தில் 26.9.2017 மற்றும் 5.10.2017 ஆகிய தேதிகளில் ஆய்வுக் கூட்டங்கள் நடத்தப்பட்டு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உரிய அறிவுரைகள் மற்றும் ஆலோசனைகள் வழங்கப்பட்டன.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, 8.9.2017, 19.9.2017 மற்றும் 10.10.2017 ஆகிய தேதிகளில் மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்களால் தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் அலுவலர்களுடன் ஆய்வு கூட்டங்கள் நடத்தப்பட்டு, தமிழ்நாடு மக்களுக்கு தடையில்லா மின்சாரம் வழங்குவது குறித்தும், போதிய மின்சாதனங்கள் இருப்பில் வைத்துக் கொள்வது குறித்தும் அறிவுரைகள் வழங்கப்பட்டன.

அதேபோல, மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்களால் பெருநகர சென்னை மாநகராட்சி, சென்னை குடிநீர் வடிகால் வாரியம் ஆகிய துறை அலுவலர்களுடன் அவ்வப்போது வடகிழக்கு பருவமழை தொடர்பான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து ஆய்வுக் கூட்டங்கள் நடத்தப்பட்டன.

**11.10.2017** அன்று தொடர்புடைய அனைத்து அரசுத் துறை அலுவலர்கள், மத்திய அரசு நிறுவனங்கள் மற்றும் மாவட்டங்கள் தோறும் நியமனம் செய்யப்பட்ட கண்காணிப்பு அலுவலர்களுடன் தலைமைச் செயலாளர் அவர்களால் வடகிழக்கு பருவமழை முன்னேற்பாடுகள் குறித்து ஆய்வுக் கூட்டம் நடத்தப்பட்டது. மேலும், **27.10.2017** அன்று பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர்களுடன் வடகிழக்கு பருவமழை முன்னேற்பாடுகள் குறித்த சிறப்பு ஆய்வுக் கூட்டம் நடத்தப்பட்டு அலுவலர்களுக்கு உரிய ஆலோசனைகள் வழங்கப்பட்டது.

**வடகிழக்கு பருவமழை முன்னேற்பாடுகள் குறித்து பல்வேறு அரசு துறைகளின் ஆய்வு:**

முதன்மைச் செயலாளர் / வருவாய் நிர்வாக ஆணையர் மற்றும் பேரிடர் தணிப்புத் துறை ஆணையர் அவர்களால் கடந்த ஜூலை **2017**லிருந்து வடகிழக்கு பருவமழை முன்னேற்பாடுகள் குறித்து பல்துறை அலுவலர்கள், மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் தனியார் நிறுவனங்களுடன் தொடர் ஆய்வுக் கூட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வந்தது.

வடகிழக்கு பருவமழை தொடர்பாக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பான விரிவான சுற்றறிக்கைகள் **8.9.2017** மற்றும் **13.10.2017** ஆகிய தேதிகளில் அனைத்து துறை அரசு அலுவலர்கள், அனைத்து மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டது.

மேலும், வடகிழக்கு பருவமழை முன்னேற்பாடுகள் தொடர்பாக கடந்த **31.7.2017, 16.8.2017, 23.8.2017, 20.10.2017** மற்றும் **27.10.2017** ஆகிய தேதிகளில் காணொளி காட்சி மூலம் அனைத்து மாவட்ட ஆட்சித்தலைவர்களுடன் ஆய்வுக் கூட்டங்கள் நடத்தி உரிய அறிவுரைகள் வழங்கப்பட்டது.

- மொத்தம் **4399** பாதிப்புக்குள்ளாகும் பகுதிகள் கண்டறியப்பட்டுள்ளன. இதில் **578** மிக அதிக பாதிப்புக்குள்ளாகும் பகுதிகள், **892** அதிக பாதிப்புக்குள்ளாகும் பகுதிகள், **1206** மிதமான பாதிப்புக்குள்ளாகும் பகுதிகள் மற்றும் **1723** குறைவான பாதிப்புக்குள்ளாகும் பகுதிகள் ஆகும்.
- **589** பல்துறை மண்டல குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.
- தேடுதல், மீட்பு மற்றும் வெளியேற்றம், நிவாரணம் ஆகிய பணிகளை மேற்கொள்வதற்காக அனைத்து துறைகளைச் சார்ந்த தனி குழு அமைக்கப்பட்டுள்ளது.
- மாவட்டம், கோட்டம் மற்றும் வட்ட அளவிலான ஒருங்கிணைப்பு குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.
- **23,325** முதல் நிலை மீட்பாளர்களைக் கொண்ட **4,399** முதல் நிலை மீட்புக்குழு ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேலும் இக்குழுவில் **6,740** பெண்கள் உள்ளடங்குவர்.

- தொகுதி, வட்டம், உட்கோட்டம் அளவிலான நடமாடும் முதல் நிலை மீட்பாளர்கள் குழு நியமிக்கப்பட்டு, அவர்களுக்கு மாவட்ட அளவில் முறையான பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

- வெள்ளம், வறட்சி போன்ற ஆபத்தினை குறைக்கும் நோக்கத்துடன், அணைகள், நீர்நிலைகள் மற்றும் ஆறுகளை தூர்வார தமிழ்நாடு அரசால் ஆணையிடப்பட்டு, மாவட்ட நிர்வாகங்களின்மூலம், விவசாயிகள் வண்டல் மண்ணை இலவசமாக தங்களது நிலங்களுக்கு பயன்படுத்திக் கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதுவரை 6 இலட்சம் விவசாயிகள் பயனடைந்துள்ளனர். மேலும் 1.6 TMC நீர்சேமிப்புகள் ஏற்படுத்தப்பட்டு, 33,612 நீர்நிலைகளில், 5.06 கோடி கன மீட்டர் வண்டல் மண் எடுக்கப்பட்டுள்ளது.
- 22,538 நீர் நிலைகள், 12,070 கி.மீ. நீளம் கொண்ட ஆற்றுப்பாதைகள் தூர்வாரப்பட்டும், நீர்நிலைகளில் கண்டறியப்பட்ட 7,030 ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டும் உள்ளன.

- 9,627 பாலங்களில் உள்ள அடைப்புகள் நீக்கப்பட்டுள்ளன. 1,37,826 சிறு பாலங்களில் உள்ள அடைப்புகள் நீக்கப்பட்டுள்ளன.

- சமூகவிரோதிகளால் பாதிப்புகள் ஏற்படுத்தப்படும் என கருதப்படும் அணைகள் கண்டறியப்பட்டு, அவைகளை பாதுகாத்திட அறிவுறுத்தப்பட்டுள்ளது.
- வெள்ளத்தால் பாதிக்கப்படும் என கண்டறியப்பட்டுள்ள பகுதிகளில் குறைந்தது இரண்டு மாதங்களுக்குத் தேவையான அத்தியாவசிய உணவுப் பொருள்களை இருப்பில் வைத்திட தமிழ்நாடு குடிமைப் பொருள் வழங்கல் துறை அறிவுறுத்தப்பட்டுள்ளது.

- தனியார் மற்றும் அரசு மருத்துவமனைகளில் உள்ள ஜென்செட் போன்ற சாதனங்களை, முதல் தளத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளதை உறுதிசெய்து கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும், அனைத்து மருத்துவமனைகளிலும் தேவையான மருந்துகள் விநியோகிப்பதற்கு ஏதுவாக போதுமான அளவு கையிருப்பு வைத்திருக்க கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

- கால்நடைகள் பாதிக்கப்படக்கூடிய பகுதிகளில் கால்நடை பராமரிப்புத் துறையினரால் தேவையான மருந்துகள் தயார்நிலையில் வைத்துக் கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது.

- இந்திய வானிலை மையத்தின் முன்கணிப்புப்படி, கட்டுமரம் / படகுகள் ஆகியவை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக தயார்நிலையில் வைத்துக் கொள்ள அனைத்து மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் உள்ளாட்சி அலுவலர்களுக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டன.

- பேரிடர் காலங்களில் பாதிக்கப்படும் மக்களுக்காக, கடலோர பேரிடர் அபாய குறைப்பு திட்டத்தின் கீழ் உலக வங்கியின் மூலமாக ரூ.345 கோடி செலவில் 121 பல்நோக்கு பாதுகாப்பு மையங்களுக்கான கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, அதில் 115 பல்நோக்கு பாதுகாப்பு மையங்கள் தயார் நிலையில் உள்ளன. இதைத்தவிர தற்காலிக நிவாரண முகாம்களும் கண்டறியப்பட்டு தயார்நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

**சென்னை மாநகராட்சியின் மூலம்:**

❖ கூவம் ஆற்றின் கரையில் ஆக்கிரமிப்பு செய்து கட்டப்பட்டிருந்த 825 வீடுகள் அகற்றப்பட்டுள்ளன. மேலும், அடையாற்றின் கரையில் ஆக்கிரமிப்பு செய்து கட்டப்பட்டிருந்த 4134 வீடுகள் அகற்றப்பட்டு அவர்களுக்கு மாற்று இடங்களும் வழங்கப்பட்டுள்ளன.

❖ பக்கிங்காம் கால்வாய், வேளச்சேரி ஏரி, கேப்டன் காட்டன் கால்வாய் மற்றும் கொடுங்கையூர் பகுதியிலுள்ள ‘‘பி’’ கால்வாய் ஆகியவைகள் தூர்வாரப்பட்டு, 4388.33 மெட்ரிக் டன் கழிவுகள் எடுக்கப்பட்டுள்ளன. இதைப்போன்று, கடந்த ஆறு மாதங்களாக 20 சிறு மற்றும் குறு கால்வாய்களில் 5753.95 மெட்ரிக் டன்கள் வண்டல் மண் மற்றும் கழிவுகள் எடுக்கப்பட்டு, மழைநீர் எளிதாக செல்வதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது. சென்னை பெருநகர மாநகராட்சிக்கு உட்பட்ட 16 சுரங்கப்பாதைகள், நெடுஞ்சாலைத் துறைக்கு உட்பட்ட 6 சுரங்கப்பாதைகள், மழைநீர் தேங்கும் சுரங்கப்பாதைகளாகக் கண்டறியப்பட்டு, 60 உயர் அழுத்த டீசல் பம்புகள் மூலம் மழைநீரை வெளியேற்றிட தயார்நிலையில் வைக்கப்பட்டுள்ளது. சென்னை பெருநகராட்சியின் 15 மண்டலங்களிலும் உள்ள பிற மழைநீர் தேங்கும் பகுதிகள் கண்டறியப்பட்டு, அவைகளில், வாகனங்கள் இடையூறின்றி செல்ல ஏதுவாக, 5 குதிரைத்திறன் மற்றும் 7.5 குதிரைத்திறன் கொண்ட 458 பம்புகள் தயார்நிலையில் வைக்கப்பட்டுள்ளன. இதைத்தவிர, விழுந்த மரங்களை வெட்டி அப்புறப்படுத்தவும், வாகன நெரிசலை தவிர்த்திடும் பொருட்டு, வாகனங்களுடன் கூடிய மரவெட்டும் கருவிகள் இரண்டு, பெட்ரோல்/டீசல் மூலம் இயங்கும் சிறு மரவெட்டும் கருவிகள் 160 மற்றும் 11 மின்சாரத்தின் மூலம் இயங்கும் மரவெட்டும் கருவிகள் தயார்நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

- ❖ வெள்ளத்தின்போது, தாழ்வான பகுதியில் இருக்கும் மக்களை பாதுகாத்திட 109 பாதுகாப்பு படகுகள் தயார் நிலையிலும், பாதிக்கப்பட்ட மக்கள் தங்குவதற்கு ஏதுவாக 176 நிவாரண முகாம்கள் தயார் நிலையிலும் உள்ளன. இதைப்போன்று, ஒரே நேரத்தில் உணவு தயார்செய்திடும் வகையில் பொது உணவு தயாரிக்கும் இடங்கள், மருத்துவ உதவி செய்திடும் வகையில் நடமாடும் மருத்துவ குழுக்கள், தரமான மற்றும் பாதுகாப்பான குடிநீர் வழங்குவதற்கு 50 அம்மா குடிநீர் மையங்கள் தயார்நிலையில் உள்ளன.

**<u>பொதுப்பணித்துறையினரால் மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள்</u>**

**1) <u>பொதுப்பணிகள்</u>**

அடையாறு மற்றும் கூவம் ஆற்றின் கழிமுகப் பகுதியில் தொடர் தூர்வாரும் பணிகள் மூலம், திறந்த நிலையில் இருக்கும் வகையில் பராமரிக்கப்பட்டு வருகிறது. வேலப்பாக்கம் பிரதான கால்வாய் மற்றும் அதன் கிளைக் கால்வாய்கள் மறுசீரமைப்பு செய்யப்பட்டுள்ளன. விரூர் மற்றும் பெரியகட்டுப்பாளையம் ஓடைகள் மறுசீரமைப்பு செய்யப்பட்டு பலப்படுத்தப்பட்டுள்ளன. மணவாய்க்கால் மற்றும் பழைய கூவம் ஆறு ஆகியவை மேம்படுத்தப்பட்டுள்ளன.

**2) <u>காவேரி டெல்டா பகுதிகளில் பருவகால மாற்றங்களை எதிர்கொள்ளும் திட்டம்</u>**

கடைமடை நீரை ஒழுங்குபடுத்தும் கருவிகள், மறு கட்டுமான பணிகள் / நீரை ஒழுங்குபடுத்தும் கருவிகளின் பராமரிப்பு பணிகள் மற்றும் ஆற்றின் மேல் நீரோட்டத்தினை வரையறுக்கப்பட்டுள்ள அளவிற்கு மேம்படுத்த குறிப்பிட்ட தூரம் வரை அகலப்படுத்துதல் மற்றும் ஆழப்படுத்துவதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**<u>வடகிழக்கு பருவமழை துவங்கிய பின்னர் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள்</u>**

- தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவமழை 27.10.2017 அன்று துவங்கியுள்ளது. 03.11.2017 வரை மாநிலத்தில் பெறப்பட்டுள்ள மழைப்பொழிவு 174 மி.மீ ஆகும்.

- பெருநகர சென்னை மாநகராட்சியின் ஒரு மண்டலத்திற்கு இரண்டு அமைச்சர்கள் என நியமிக்கப்பட்டு மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை கண்காணித்து வருகின்றனர்.

- அனைத்து மாவட்டங்களுக்கும், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலங்களுக்கும் அனுபவம் பெற்ற இந்திய ஆட்சிப் பணியாளர்கள் கண்காணிப்பு அலுவலர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

- சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், நாகப்பட்டினம் மற்றும் கடலூார் மாவட்டங்களில் மிக அதிக மழைப்பொழிவு பதிவாகியுள்ளது.

- சென்னை, காஞ்சிபுரம், நாகப்பட்டினம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் பெய்துவரும் தொடர் மழையினால் தாழ்வான பகுதிகளில் வசிக்கும் 10,640 நபர்கள் 114 நிவாரண மையங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

- 43 பணியாளர்கள் அடங்கிய ஒரு மாநில பேரிடர் மீட்புக்குழு தாம்பரத்தில் தயார்நிலையில் வைக்கப்பட்டுள்ளது. அக்குழு தேவைப்படும் நேரங்களில் தாழ்வான பகுதிகளில் தேடுதல் மற்றும் மீட்புப் பணிகளில் ஈடுபடுத்தப்படும்.

- பல்துறை குழுக்கள் நியமிக்கப்பட்டு, தாழ்வான பகுதிகளில் தண்ணீரை வெளியேற்றுவது, அடைப்புகளை நீக்குவது போன்ற பணிகளை கண்காணித்து வருகின்றனர்.

- தேவை ஏற்பட்டால் ஒழிய தங்களது வீடுகளைவிட்டு வெளியே வராமல் இருக்க மக்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

- மனித மற்றும் கால்நடை உயிரிழப்பை தவிர்க்க, தண்ணீர் தேங்கியிருக்கும் பகுதிகளில் மின்இணைப்பு துண்டிக்கப்படும்.

- ஆபத்தான கட்டிடங்களில் மக்கள் தங்க வேண்டாம் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

- குளோரின் கலந்த நீர் மற்றும் கொதிக்க வைத்த நீரை குடிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது.

- அணைகள் மற்றும் குளங்களின் நீர் அளவு கூர்ந்து கண்காணிப்படுகின்றன. உரிய வழிமுறைகளைப் பின்பற்றி, மக்களுக்கு தகவல் கொடுத்த பின்பே, குளங்கள் மற்றும் நீர்த்தேக்கங்களிலிருந்து நீர் வெளியேற்றப்படும். ஆதலால் மக்கள் வதந்திகளை நம்பவேண்டாம் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

- மழை மற்றும் வெள்ளம் குறித்த சூழ்நிலைகள், மாநில அவசர கட்டுப்பாட்டு மையம், எழிலகம் (தொலைபேசி எண் 1070), பெருநகர சென்னை மாநகராட்சி

(தொலைபேசி எண் 1913) மற்றும் மாவட்டங்களிலுள்ள அவசர கட்டுப்பாட்டு மையங்கள் (தொலைபேசி 1077) மூலமாக கண்காணிக்கப்பட்டு வருகின்றது.

- 2.11.2017 அன்று இரவு சென்னை மாநகரம் 31 செ.மீ அளவு மழை பெற்றபோது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்திரவின்படி, மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர் ஆகியோர் கொண்ட குழு, மாநில அவசர கட்டுப்பாட்டு மையத்திலிருந்து நிவாரணப் பணிகளை கண்காணித்து ஒருங்கிணைத்தனர். மாண்புமிகு அமைச்சர்கள் மற்றும் கண்காணிப்பு அதிகாரிகள் 02.11.2017 அன்று இரவு முழுவதும் பாதிக்கப்பட்ட பகுதிகளை ஆய்வு செய்தார்கள்.

- மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், மாண்புமிகு துணை முதலமைச்சர் மற்றும் அமைச்சர் பெருமக்கள் 3.11.2017 அன்று சென்னை மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில் வடகிழக்குப் பருவ மழையினால் பாதிக்கப்பட்டப் பகுதிகளை நேரில் பார்வையிட்டு, தேங்கியுள்ள மழைநீரை வெளியேற்ற துரித நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்கள். மேலும், முகாம்களில் தங்கியுள்ள மக்களுக்கு உணவு மற்றும் நிவாரணப் பொருட்களை வழங்கினார்கள்.

* * * * *

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**